(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO**. 376/2023 அ.சா.5

Name : திருமதி. சந்திரா

Father's name :

Village :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.07.2026.

**( 1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது பொம்மையன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளில் 1வது எதிரியை மட்டும் எனக்கு தெரியும். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 22.05.2022ம் தேதி காலை 08.00 மணியளவில் எனது கணவர் எனது மகனை கருங்காலக்குடி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது என் மகன் எங்களுக்கு சொந்தமான TN 40 5834 என்ற எண் கொண்ட Suzuki இருசக்கர வாகனத்தில் நின்று கொண்டிருந்ததாகவும், அப்போது எனது கணவர் என் மகனிடம் வீட்டிற்கு சாப்பிட வரவில்லை என்று கேட்டதற்கு நீங்க போங்க நான் வருகிறேன் என்று சொன்னதாக என் கணவர் என்னிடம் சொன்னார், அதன் பின்பு என் கணவர் மதியம் 01.00 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது எங்கள் ஊரில் குடியிருக்கும் எனது கணவரின் அண்ணன் சின்னச்சாமி மகன் பாலு எனது கணவரிடம் வந்து என் மகன் பெரியகருப்பன் கருங்காலக்குடி மொல்லமலை சோலைமலை வயல் அருகில் உள்ள ஆண்டிச்சாமி பாறையில்

இறந்துகிடப்பதாகவும், அம்பலகாரன் பட்டியைச் சேர்ந்த அழகு மகன் முருகன் எங்கள் ஊர் மாயழகன் மகன் செல்வத்திடம் சொல்லி செல்வம் பாலுவிடம் சொன்னதாகவும், பாலு எனது கணவரிடம் சொல்லவும் உடனே எனது கணவரும் அவரது அண்ணன் மகன் பாலுவும் ஆண்டிச்சாமி பாறைக்கு போய் பார்த்தபோது என் மகன் உடம்பில் கன்றிய காயங்களுடன் மூக்கில் இரத்தம் வந்த நிலையில் தலை தெற்காகவும், கால்கள் வடக்கு நோக்கியும் மல்லாக்க இறந்துகிடந்ததாகவும், அப்போது அங்கு வந்த என் கணவரின் உடன் பிறந்த தம்பி தனசேகரன் எனது மகன் பெரியகருப்பனை இருசக்கர வாகனத்தில உட்கார வைத்து தனசேகரன் இருசக்கர வாகனத்தை ஓட்டிக்கொண்டு மொல்லமலை ஆண்டிச்சாமி பாறைக்கு போனதாகவும், எனது தங்கை குன்னங்குடி பட்டியைச் சேர்ந்த நாச்சியப்பன் மனைவி ராசாத்தியிடம் காடம்பட்டியைச் சேர்ந்த எங்கள் உறவுக்காரர் சேவுகபெருமாள் மகன் செல்வக்குமார் 22.05.2022ம் தேதிகாலை 08.00 மணியளவில் எனது மகன் பெரியகருப்பன் கருங்காலக்குடி அரசு மருத்துவமனை பக்கம் நின்று கொண்டிருந்தபோது தனசேகரன் என் மகனிடம் போன்போட்டு உன்கிட்ட ஒரு விஷயம் பேசனும் வா என்று கூப்பிட்டதாகவும், அதனால் மாமா நீங்களும் வா என்று கூப்பிட்டதாகவும், அதற்கு செல்வக்குமார் நான் காடம்பட்டியில் இருக்கிறேன் எனக்கு வண்டி கிடையாது என காலை 10.00 மணிக்கு ராசாத்தி கருங்காலக்குடியில் பூ விற்கும்போது எனது கணவரிடம் சொன்னதாகவும், என் கணவர் என்னிடம் சொன்னார் என்றும், எனது மகனுக்கும் தனசேகரன் மனைவி முத்துச்செல்விக்கும் தவறான முறையில் பழக்கம் இருந்ததால் தனசேகரன் என் மகன் மீது வன்மம் கொண்டு எனது மகனை தனசேகரன் ஆட்களை வைத்து கொலை செய்துள்ளான் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.:-**</u>

<u>**மறு விசாரணை -**</u> இல்லை.

Sd/- சந்திரா

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.07.13 19:19:05 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.